IJCRT.ORG ISSN : 2320-2882
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# Naanmanikadigai which presents individual ethics

Dr. (Mrs.) P. Thamilarasi
Sr. Professor
Department of Tamil
Karpagam Academy of Higher Education
Coimbatore - 641021

**Abstract**

The *Nāṉmaṇikkaṭigai*, an eminent work of Tamil *neethi* (ethical) literature, occupies a distinctive place in the moral-philosophical discourse of classical Tamil society. Composed primarily by Vilambi Nāganār in the *venpa* meter, its 106 verses encapsulate moral ideals in compact fourfold expressions, likened to a jewel strung with four gems. This study examines the conceptualization of *aram* (virtue) within the text, foregrounding its role as the foundation of human life and social order. Core themes—including love (*anbu*), family life (*illvaazhkkai*), charity (*eegai*), discipline (*ozhukkam*), compassion, and non-violence—are analyzed to demonstrate their ethical universality and continued applicability. The text emphasizes purity of thought, self-restraint, and communal harmony as prerequisites for meaningful existence. By situating these values within the broader trajectory of Tamil moral philosophy, this article argues that *Nāṉmaṇikkaṭigai* not only reflects the ethical consciousness of its time but also offers enduring guidance for contemporary individual integrity and collective well-being.

**Key Words:** Nāṉmaṇikkaṭigai, Tamil literature, ethics, virtue (aram), moral philosophy, Vilambi Nāganār

## தனி மனித அறத்தை முன்வைக்கும் நான்மணிக்கடிகை

முனைவர் ப. தமிழரசி
பேராசிரியர்
தமிழ்த்துறை,
கற்பகம் உயர்கல்விக்கழகம்
கோயம்புத்தூர் - 641021

**முன்னுரை**

ஒரு மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்பதையே நீதி நூல்கள் கூறுகின்றன. உயிர்களின் தோற்றத்திற்குக் காரணமான இவ்வுலகம் உயிர்களின் இன்ப துன்பத்திற்கும் மட்டுமின்றி உயிர்களின் அறிவு, தெளிவு, ஒழுக்கம் போன்ற செயல்பாடுகளுக்கும் காரணமாகின்றன. அதனால் தான்ஒவ்வொரு காலகட்டத்திலும் அறவோர் பலர் வாழ்ந்து தாம் பின்பற்றி ஒழுகிய அறநெறிகளைப் பிறரும் மேற்கொண்டு இன்புறுதல் வேண்டும் என்று எண்ணினர். அதன் பொருட்டு அறம் நிறைந்த நல்ல நூல்களைஇயற்றினர். அனைது காலகட்டத்திலும் வாழும் மக்களுக்கான அறங்களை நான்மணிக்டிகை கூறியுள்ளது. இந்நூலிலுள்ள அனைத்து அறங்களும் இன்றளவும் மக்களால்,

தமிழர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டு அனைவராலும் ஏதேனும் ஒரு நிலையில் பின்பற்றப்படுகின்றன. அதுகுறித்து ஆய்வதாகவே இக்கட்டுரை அமைகிறது.

**நான்மணிக்கடிகை**

நான்மணிக்கடிகை என்பதற்கு நான்கு மணிகள் கோர்த்துக் கட்டப்பட்ட ஆபரணம் என்பது பொருள். ஒவ்வொரு பாடலும் ஒரு அணிகலன். மணி போன்ற நான்கு கருத்துக்கள் ஒவ்வொரு பாடலிலும் பொருந்தும் படி அமைக்கப்பட்டுள்ளதால் இது நான்மணிக்கடிகை எனப்பட்டது. கடிகையின் வெண்பாக்கள் இனிமையானவை. தெளிவானவை. விளக்கமானவை. ஒளிபொருந்திய மணியாரம் என்பதனால் செய்யுள்கள் ஒளிபெற்று விளங்குவதோடு தெளிவாகவும் கூறவந்ததைக் கூறும். 106 வெண்பாக்கள் காணப்படுகின்றன. இதில் 100 பாடல்கள் நூலாசிரியர் விளம்பி நாகனாராலும் 6 பாடல்கள் இடைச் செருகலாகவும் இருக்கலாம் என்பர் ஆய்வாளர்கள்.

**அறம்**

தமிழில் நீதியை உணர்த்தும் விதமாக அக மற்றும் புறத்திணை இலக்கியங்களிலேயே செய்திகள் அமைந்துள்ளன. இலக்கியங்கள் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதி பொருள்களை தான் என்று கொண்ட கருப்பொருள்களுக்கு ஏற்ப விளக்கும் தன்மை உடையவை. நான்கு உறுதி பொருள்களுள் முதலாவதாக கூறப்படும் அறமே எல்லாவற்றிற்கும் தொடக்கமாக அமைகிறது .அறநெறியில் வாழ்ந்து தவறு செய்தால் அறமே தண்டிக்கும் இயல்புடையது இலக்கியமானாலும் சரி,வாழ்க்கையானாலும் சரி அறம் சார்ந்தே இயங்கவேண்டும். உலகில் உள்ள எல்லா உயிர்களாலும் விரும்பி நுகர்ப்படுவது இன்பம். அந்த இன்பத்திற்கு அடிப்படைக் காரணமாகக் கருதப்பட்டு அறிவுடைய மக்களால் ஈட்டப்படுவது பொருள். பிறருக்கு தீங்கு நினையாத மாசற்ற மனதால் பொருள் செய்தொழுகும் முறை அறமாகும்.

**அறத்தின் பொருள்**

அறம் என்ற சொல்லுக்கு ஒழுக்கம், வழக்கம், நீதி, கடமை, ஈகை, கடவுள், புண்ணியம், சமயம், கற்பு, இல்லறம், துறவறம் என்ற பல பொருள்கள் உண்டு. அறம் என்பதற்கு நல்ல செயல்களின் தொகுதி என்று பொருள். அறம் என்னும் சொல் நட்பண்பு அல்லது நல்லலொழுக்கம் என்னும் பொருள்களிலேயே இலக்கியங்களில் வழங்கப்பட்டு வருகின்றன.

அறம் என்பது அன்பால் உணரப்படுவது, அறிவால் தெளிந்து ஆற்றப்படுவது. பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடாமல் ஒழுக்கத்தை மேற்கொள்வது ஆகும் தனிமனிதனுக்கும் அறம் சொல்லும் முறை ஓங்கி நிற்கிறது. அற வழியில் நின்று அன்பு வழியில் வாழ்வது தான் வாழ்வு. அதுவே குற்றமற்ற வாழ்வாகும். அறவழியில் அன்பைக் கடைபிடித்து வாழ்பவர்களே வாழ்பவராகக் கருதப்படுவர். அறநூல்களில் மனிதன் கடைபிடிக்கக் கூடிய மற்றும் கடை பிடிக்கக் கூடாத செயல்கள் பல காணப்படுகின்றன.

**அறத்தின் அடிப்படை**

அறம் என்பது செயலா, சொல்லா, எண்ணமா என்று பார்க்கும் போது செயலுக்கு அடிப்படையாக இருப்பது எண்ணம். எண்ணம் தூய்மையாக இருந்தால் தான் சொல்லும் செயலும் தூய்மையாக அமைய முடியும். பிறருக்கு தீங்கு நினையாத மாசற்ற மனதால் பொருள் செய்தொழுகும் முறை அறமாகும் என்பதை திருவள்ளுவர்,

**"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அணைத்துஅறன்**
**ஆகுல நீர பிற" - குறள் – 34**

என்று கூறியுள்ளார் .அறநூல்களுக்கு உயிராக இருப்பது கருத்து. அறக்கருத்துக்களை இலக்கியச் சுவை கலந்து கொடுக்கும் போது அற இலக்கியம் ஆகின்றது. அறவோர் பலர் வாழ்ந்து தாம் பின்பற்றிய ஒழுகிய அறநெறிகளைப் பிறரும் மேற்கொண்டு இன்புறுதல் வேண்டும் என்பதன் பொருட்டு பல நூல்களை நம் முன்னோர்கள் இயற்றினர். அதில் அறம் கூறும் அன்புடைமை, இல்வாழ்க்கை, ஈகை, ஊன் உண்ணாமை, ஒழுக்கம், கொல்லாமை, நன்றி உணர்வு, பெற்றோரைப் பேணுதல், விருந்தோம்பல், வெகுலாமை போன்ற அறங்களை நான்மணிக்கடிகை பெரிதும் வலியுறுத்தி உள்ளமையை பின்வரும் பகுதிகளில் காணலாம்.

**அன்புடைமை**

மக்கள் இனம் உயர்வதற்கு மிக மிக அடிப்படை நம் மக்களின் சிறந்த பண்பான அன்பாகும். இப்பண்பை மனிதன் குழந்தை பருவத்திலே எய்துவது இயல்பானதாகும். அதனால் தான் **தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்** என்ற பழமொழி தோன்றியது. எனவே மக்கள் உயர அவர்களுக்கு முதன்மையானது அன்பே என்பது தெளிவாகிறது. மானுடருக்கு மிக முதல் தேவையான அன்பு என்பது அனைத்து மதத்தாரும், அனைத்து மதங்களும் போதிக்கும் கருத்தாகும். அன்பே செல்வம் என்பது உலகப் பொதுமொழி. உயர்திணை, அஃறிணை, உயிர் அனைத்தின் மேலும் மனிதன் காட்டும் கருணையே அன்பு எனப்படுகிறது.

அன்புள்ளவரை பிரிந்து வாழ்வதை விட நெருப்பில் மூழ்கி உயிர் விடுதல் நல்லது இதனை நான்மணிக்கடிகை,

**பசைந்தாரின் தீர்தலின் தீப்புகுதல் நன்று** (பாடல் -13)

எனக் கூறுகிறது. அன்பில்லா வீட்டில் உணவு உண்பது குற்றம் இதனை நான்மணிக்கடிகை பாடல் எண் 92 ம் கூறுகிறது.

**இல்வாழ்க்கை**

இல்லறம் என்பது அறத்திற்கு அடிப்படையாக அமைவதாகும். இல்வாழ்க்கை மேற்கொள்ளும் ஒருவன் மனைவி, மக்கள், பெற்றோர் ஆகிய மூவரையும் நெறி தவறாமல் காக்கும் நிலையான துணையாக இருக்க வேண்டும். இல்லறத்திற்கு ஏற்ப நல்ல குண நலன்களும், செயல்களும் அமையப்பெற்றுத் தன் கணவனது வருவாய்க்கு ஏற்ப வாழ்க்கை நடத்துபவளே சிறந்த மனைவியாவாள். இல்லற வாழ்வில் கணவன் தன் மனைவியுடன் கூடி வாழ வேண்டும். அவ்வாறு செய்யாது அவளை துன்பத்தில் ஆழ்த்துவது சிறந்த அறம் ஆகாது. இல்வாழ்க்கையின் மூலம் பெறப்படும் வாழ்வியல் அனுபவங்களும், உண்மைகளும் மனித வாழ்வை

செம்மைப்படுத்தி அறம் விளங்கச் செய்யும். இல்வாழ்க்கைக்கு சிறந்த செல்வம் நல்ல மகளிர் எனவும். அழகும், அறிவும் உடையவளே இல்லறத்திற்கேற்ற பெண் எனவும் நான்மணிக்கடிகையில் கூறப்பட்டுள்ளது. மேலும், வீட்டிற்கு பாழாவது ஒளி பொருந்திய நெற்றியை உடைய பெண் இல்லாமையாகும் என 20 மற்றும் பாடல் 99 லும் விளம்பிநாகனார் கூறுகிறார்.

கெட்ட நடத்தை உள்ள மனைவி கணவனுக்கு எமன் போன்றவள் என்பதனை நான்மணிக்கடிகை

**கூற்றமே இல்லத்துத் தீங்கு ஒழுகு வாள்** (பாடல் 83)

என்று எடுத்துரைக்கிறது. இதே கருத்தமைந்த பாடலை அவ்வையாரும் தனது கொன்றை வேந்தனில் **தோற்றம் கண்டு தூற்றும் பெண்டிர் கூற்று எனத் தகும்** என்று கூறியுள்ளார் ஒரு குடும்பத்தின் அடிப்படை பண்பு, நல்ல இல்லறம். இல்லறம் சிறப்பாக இருந்தால் குடும்பம் சிறப்பாக அமையும்.

**ஈகை**

இல்லை என்று வந்தவருக்கு இல்லை என்னாது கொடுத்தலே தர்மம் ஆகும். பெறுதற்கரிய பிறவி மனிதப் பிறவியாகும். இப்பிறவியினைப் பெற்றவர்கள் செய்ய வேண்டிய செயல்கள் பல உள்ளன. பயன் கருதாமல் செய்யும் தானம் உயர்ந்தது. இந்த தர்மம் செய்தால் என்ன புண்ணியம் கிட்டும் என்று வாணிக நிலையில் செய்யும் தர்மம் உயர்ந்ததாகாது. ஒருவர் செய்த ஈகைச் செயலுக்கு இறைவனின் அருள் கிடைக்கும், இம்மைக்கும் புகழ் கிடைக்கும். **தர்மம் தலைகாக்கும் தக்க சமயத்தில் உயிர்காக்கும்** என்பது நாம் அனுபவப்பூர்வமாக அறிந்ததாகும். பழுமரம் போல தன்னை நாடி வந்தவர்களுக்கு முகக் குறிப்பறிந்து ஒரு பொருளை கொடுப்பதே சிறந்த கொடையாகும். ஆண்டாண்டு காலமாக மனிதன் வாழ்ந்தாலும் பிறருக்கு உதவிடும் ஈகை சிறப்பே, என்றும் நிலைத்து வாழும்.

நான்மணிக்கடிகையில் ஈகை பற்றி குறிப்பிடும்போது செல்வர் வறியவருக்கு ஈயும் போது களிப்பர் எனவும், இல்லை என்று சொல்லாமல் கொடுக்கின்ற உறுதி வேறு இல்லை எனவும், ஏழைகளுக்கு உணவளிப்பவனின் குடும்பம் பெருமை அடையும் எனவும் கூறப்பட்டுள்ளது.

வறியவருக்கு வழங்கும் போது தான் செல்வத்தால் இன்பம் உண்டு என்பதை நான்மணிக்கடிகையில்,

**பொருளின் தொகை இனிது தொட்டு வழங்கின்** ( பாடல்- 37)

என்பது ஆகும். இதே கருத்த அமைந்த பாடல் புறநானூற்றில்

**செல்வத்துப் பயனே ஈதல்** ( பாடல்- 100)

எனக் கூறப்பட்டுள்ளது. பிறருக்கு கொடுத்துண்பவன் புகழ்பெறுவான் எனவும், வைத்துக்கொண்டு இல்லை என்பவன் ஈவாரைக் காணின் தலைகுனிவான் எனவும். இரப்போர் ஈவாரை நாடிச் செல்வர் எனவும் நான்மணிக்கடிகையில் கூறப்பட்டுள்ளது.

**உறவுகளுடன் இணைந்திருத்தல்**

மனிதன் தனித்து இயங்க இயலாதவன் அதனால் அவன் குடும்பம், நட்பு, உறவு என்ற வட்டங்களை ஏற்படுத்தி இனிமை கண்டான். வீட்டு ஒற்றுமையால்

ஊர் ஒற்றுமை ஆகும். ஊர் ஒற்றுமையால் நாடு ஒற்றுமை அடையும். அதனால் தான் கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்ற பழமொழியை கூறுகின்றான். உறவுகள் ஒன்றுபட வேண்டுமாயின் மக்கள் இதயம் பண்பட வேண்டும். குறுகிய மனப்பான்மை அகன்று பரந்த மனப்பான்மை ஏற்படுதல் வேண்டும். வேற்றுமைகளை மறந்து விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை மூலம் ஒற்றுமை காண வேண்டும் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு உடனிருந்து உதவுபவர்களே உறவினர் ஆவர்.

உறவினரை கைவிட்டால் தீமை உண்டு என்பதையும் நான்மணிக்கடிகை பாடல் எண் 18 லும் இதே கருத்தை பாடல் எண் 85 லும் ஆசிரியர் கூறியுள்ளார்.

**கேட்டு ஆக்கம் கேளிர் ஒரீஇ விடல்** பாடல் 18

உறவினர் இல்லாத போது பிறரிடம் கோபம் கொள்ளுதல் குற்றம் என்பதை பாடல் எண் 92 இல் கூறப்பட்டுள்ளது. நற்குடியில் பிறந்தவர் உறவினருக்கு உதவாமல் வாழ மாட்டார். இதே கருத்தை திருவள்ளுவர் ஒருவன் சுற்றத்தார்க்கு வேண்டிய பொருள் கொடுத்தால் சுற்றத்தார் பலரால் சூழப்படுவான் என்பதை

**கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய**
**சுற்றத்தால் சுற்றப் படும்**

என்று குறள் 525-ல் கூறப்பட்டுள்ளது.

**ஊன் உண்ணாமை**

ஊன் உண்ணல் ஓர் இயல்பான உணவு பழக்கமாகவே கொள்ளப்பட்டது. ஆனால் சங்கம் மருவிய காலத்தில் ஊனுக்காகவோ, வேள்விக்காகவோ ஓர் உயிரை கொல்லுதல் கடும் கண்டனத்திற்கு உள்ளானது. ஊன் உண்ணுதல் இழிசெயல் என்றும், பாவச்செயல் என்றும் கருதுகிற நிலை ஏற்பட்டது. ஊன் உண்ணும் போது அருள் உணர்வு குறைந்து போகக்கூடிய நிலை ஏற்படும்.

ஊன் உண்ணாமையே தன் உயிருக்கு நன்மையாகும். மேலும் புலால் உண்ணாமல் தாவர உணவுகளை உண்பவனே இனிமையாக உண்பவன் இதனை நான்மணிக்கடிகையில்

**இனிது உண்பான் என்பான் உயிர்கொல்லாது உண்பான்**
பாடல் 59

ஊன் உண்ணாமையைப் பற்றி விளம்பி நாகனார் புலி ஊனைத் தின்று மகிழும். இதனால் நல்ல நிறத்தை அடையும். நீர்வளம் உள்ள நிலத்தில் வளர்ந்த புல்லை மேய்வதால் பசுக்கள் இன்பம் அடையும் இதனை

**ஊணுண்டு உழுவை நிறம் பெறூஉம் நீர் நிலத்துப்**
**புல்லினால் இன்புறூஉம் காலேயம்** பாடல் 66

எனக் கூறியுள்ளார். உயிர்களின் இறைச்சியைத் தின்று தன் இறைச்சியை வளர்க்காதது இனிமையாகும். என்பதை இனியவை நாற்பதில்

**ஊனைத் தின்று ஊனைப் பெருக்காமை முன் இனிதே**

என்று பூதஞ்செய்தனார் தன்னுடைய இனியவை நாற்பது நூலின் 4 ஆம் பாடலில்கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஒழுக்கம்**

இன்று உலகமெங்கும் தீவிரவாதம் தலைதூக்கி நிற்கிறது. சாதி, சமயப் பூசல்கள் ஒருபுறம் நிகழ்கிறது. இதனால் நாட்டில் அமைதி கெடுகிறது. இன்னல் தோன்றுகிறது. இந்த இன்னலில் இருந்து நாடும், சமுதாயமும் விடுபட வேண்டுமானால், தனிமனித ஒழுக்கம் சிறக்க வேண்டும். தனிமனித ஒழுக்கம் தான் நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாகவும் அமைகிறது. ஒழுக்கத்தை போற்றுவது ஆறறிவு படைத்த மனிதர்களுக்கு உரிய கடமையாகும். ஒருவனுக்கு உடல் தூய்மை எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு உள்ளத் தூய்மையும் முக்கியமானது ஆகும். மனிதன் ஒருவனே மொழியைக் கண்டுபிடித்தவன். நாகரீகமாக வாழத் தெரிந்தவன். அதற்காகவே ஆன்றோர் பலர் தோன்றி, அரிய கருத்துக்களை எடுத்துச் சொல்லி, வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். அவர் கண்ட வழியைக் கடைபிடித்து ஒழுகுவதே ஒழுக்கமாகும்.

ஒருவரிடம் உள்ள நல்லொழுக்கமே செல்வமாகும். நெறியுடன் வாழுதல் பெரும் அறச் செயலாகும் என்பதை நான்மணிக்கடிகை

**திருஒக்கம் தீதுஇல் ஒழுக்கம் பெரிய**
**அறன்ஒக்கம் ஆற்றின் ஒழுகல** பாடல் 6

எனக் கூறுகிறது. மேலும் பின்பு தீமைகள் பல வருவதனால், பிறர் பொருளைத் திருடாதிருக்க வேண்டும். தமக்குத் தகுந்த ஒழுக்கங்களை தள்ளி விடாமல் பின்பற்ற வேண்டும். எவரிடத்தும் விரோதம் கொள்ளக்கூடாது. இதனை நான்மணிக்கடிகை,

**கள்ளாமை வேண்டும் கடிய வருதலால்**
**தள்ளாமை வேண்டும் தகுதி உடையன்**
**நள்ளாமை வேண்டும் சிறியாரோடு யார்மட்டும்**
**கொள்ளாமை வேண்டும் பகை** பாடல் 86

எனக் கூறுகிறது. ஒழுக்கம் உடையவராக இருப்பதே உயர்ந்த குடிப்பிறப்பின் தன்மையாகும். ஒழுக்கம் தவறுதல் இழிந்த பிறப்பின் தன்மையாகிவிடும் என்பதை திருவள்ளுவர்,

**ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்** குறள் 133

என்கிறார். இதே கருத்தை அவ்வையார் தன்னுடைய கொன்றை வேந்தனில்,

**பூரியோருக்கு இல்லை சீரிய ஒழுக்கம்** பாடல் 64

என்கிறார் ஒழுக்கம் ஒவ்வொரு சமூகத்திலும் காலத்திற்கேற்ப மாறக்கூடியது...

**முடிவுரை**

ஒவ்வொரு மனிதனும் வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டுமானால் அறநெறிகளைக் கடைப்பிடித்து வாழ வேண்டும். நான்மணிக்கடிகையில் கூறப்பட்டுள்ள பல கருத்துக்கள் மனித வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்கு இன்று வரை உதவி வருகின்றன. மனித மனத்தின் இயல்புகளை உலக மெய்ம்மைகளோடு ஒப்புநோக்கிப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. ஒவ்வொரு மனிதனிடமும் இருக்கவேண்டிய வாழ்வின் அடிப்படை நெறியானது, எளிமையாக சுருக்கமாக தெள்ளத்தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஒரு நாடு நன்றாக இருக்க வேண்டுமானால் தனி மனித ஒழுக்கம் சிறப்பாக அமைய வேண்டும். பல பாடல்கள் மனிதனின் தன்னம்பிக்கை, சுய முன்னேற்றத்தை வளர்ப்பதாக அமைந்துள்ளன. இன்றைய நிலையில் இத்தகைய விளம்பிநாகனாரின்

நான்மணிக்கடிகை போன்ற நூல்கள் தேவைப்படுகின்றன. மனிதர்களின் மனங்களைப் பக்குவப்படுத்தவும் இது போன்ற கட்டுரைகள் உதவும்.

**அடிக்குறிப்புகள்**

1. திருக்குறள் எண் 34
2. சாமி சிதம்பரனார் நான்மணிக்கடிகை பாட்டும் உரையும், பாடல் 13
3. சாமி சிதம்பரனார் நான்மணிக்கடிகை பாட்டும் உரையும், பாடல் 83
4. சாமி சிதம்பரனார் நான்மணிக்கடிகை பாட்டும் உரையும், பாடல் 37
5. புறநானூறு பாடல் எண் 100
6. சாமி சிதம்பரனார் நான்மணிக்கடிகை பாட்டும் உரையும், பாடல் 18
7. சாமி சிதம்பரனார் நான்மணிக்கடிகை பாட்டும் உரையும், பாடல் 59
8. சாமி சிதம்பரனார் நான்மணிக்கடிகை பாட்டும் உரையும், பாடல் 66
9. பூதஞ்சேந்தனார் இனியவை நாற்பது பாடல் எண் 4
10. சாமி சிதம்பரனார் நான்மணிக்கடிகை பாட்டும் உரையும், பாடல் 06
11. சாமி சிதம்பரனார் நான்மணிக்கடிகை பாட்டும் உரையும், பாடல் 86
12. திருக்குறள் எண் 1333
13. அவ்வையார் கொன்றை வேந்தன் பாடல் எண் 64
14. ராசாராம் பதினென் கீழ்க்கணக்கு நூல்கள்